**பாத்.ஃ.பைன்டர் இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டில்**
**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் ஆற்றிய உரை**
**நவம்பர் 10, 2020**

**தூதுவர் டெப்லிட்ஸ்:** மிக்க நன்றி மற்றும் மதிய வணக்கம். மேன்மைதங்கியோர்களே, மரியாதைக்குரிய குழு உறுப்பினர்களே, பங்கேற்பாளர்களே, வெளிவிவகார செயலாளர் அவர்களே, இந்து சமுத்திர பிராந்தியத்தில் பாதுகாப்பு சிக்கல்கள் பற்றி கலந்துரையாட, குறிப்பாக இந்தியா, இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கு இராஜாங்க செயலாளர் பொம்பேயோ மேற்கொண்ட வெற்றிகரமான விஜயம் மற்றும் மாலைதீவில் தூதரகமொன்றை ஸ்தாபிப்பதற்கான அமெரிக்காவின் நோக்கங்கள் பற்றிய அறிவிப்பு ஆகியவற்றின் பின்னரான இந்த தருணத்தில் இந்த மாநாட்டின் ஆரம்ப அமர்வில் உங்கள் அனைவருடனும் இணைந்து கொள்ள முடிந்தமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,

இந்த முக்கிய கலந்துரையாடலுக்கு எம்மை அணிசேர்த்தமைக்காக பாத்.ஃ.பைன்டர் ஃ.பவுண்டேஷனையும் மாநாட்டின் இணைத் தலைமைகளான தூதுவர் குணதிலக மற்றும் தூதுவர் மேனனையும் நான் அங்கீகரிக்க விரும்புவதுடன், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்றின் கோட்பாடு மற்றும் அனைத்து நாடுகளுக்குமான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புக்கு அது எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பன தொடர்பில் இந்த ஆரம்ப உரையில் சுருக்கமாக கலந்துரையாடுவதற்கான இந்த வாய்ப்புக்கு நான் நன்றி பாராட்டுகிறேன்.

இந்து சமுத்திரத்தின் புவிசார் மூலோபாய முக்கியத்துவம் தெளிவானதாகும். உலகின் அரைவாசி கொள்கலன் கப்பல்களின் பயணங்கள், உலகின் மொத்த சரக்கு போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கு, மற்றும் உலக எண்ணெய் ஏற்றுமதியின் மூன்றில் இரண்டு பங்கு போன்ற விடயங்களை தன்னகத்தே கொண்ட பெரும் கடல்வழிப் பாதைகளுடன் அது உலக வர்த்தகத்துக்கான முக்கிய உயிர்நாடியாக காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும், ஏனைய பிராந்தியங்களை பாதிக்கும் சவால்களில் இருந்து இது விடுபடவில்லை என்பதுடன், நிச்சயமாக தனக்குரிய தனித்துவமான சவால்களையும் கொண்டுள்ளது. கடற்பயண பாதுகாப்பு, மனித மற்றும் வனவிலங்கு கடத்தல், போதைப்பொருள் கடத்தல், சுற்றுச்சூழல் சீரழிவு, மற்றும் சட்டவிரோத மீன்பிடி என்பன இவற்றில் உள்ளடங்குகின்றன. ஏனைய பேச்சாளர்கள் எழுப்பிய விவகாரங்களில் இவை சிலவாகும் என்பதுடன், இந்த சவால்களில் சிலவற்றை தமது கலந்துரையாடல்களில் ஆழமாக ஆராய்வதற்கு குழு உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

உலகில் வேகமாக வளர்ந்து வரும் சில பொருளாதாரங்களையும் இந்தோ-பசுபிக் பிராந்தியம் கொண்டுள்ள அதேநேரம், இளையோர் சமூகம் அதிகரித்து வருவதால் பொருளாதார வளர்ச்சிக்கான மிகப் பெரிய கேள்வியையும் கொண்டுள்ளது. இது சிக்கலான பிராந்தியமொன்று என்பதுடன், சவால்களும் அதற்கு சமமான அளவு சிக்கல் கொண்டவையாக காணப்படுகின்றன.

ஆகவே, எமது நாடுகள் பகிர்ந்துக் கொள்வதும் இந்த சவால்களில் சிலவற்றை எதிர்கொள்வதற்கான கட்டமைப்பொன்று பற்றி சிந்திப்பதில் அனைவருக்குமான வெற்றிக்கு அத்தியாவசியமானதுமான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் சர்வதேச விதிமுறைகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும் என்பதை நான் பரிந்துரைக்கிறேன். நிச்சயமாக, கடல் சட்டம் மற்றும் சர்வதேச சிவில் விமான சேவைகள் பற்றிய சாசனம் ஆகியவற்றுக்கு இணங்க கடல் மற்றும் ஆகாய மார்க்கங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது இவற்றில் முக்கியமானதாக காணப்படுகிறது. இறையாண்மையுடைய நாடுகளை வெளிப்புற வற்புறுத்தல்களில் இருந்து நாம் பாதுகாக்க வேண்டும் என்பதுடன், சந்தை அடிப்படையிலான பொருளாதாரம், திறந்த முதலீட்டு சூழல், சர்வதேச சட்டத்திற்கு அமைவான நியாயமானதும் பரஸ்பரமானதுமான வர்த்தகம், மற்றும் நியாயமான போட்டித்தன்மைக்கான கொள்கைகளை ஊக்குவிக்கவும் வேண்டும். நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் சிவில் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான மதிப்பு ஆகியவற்றை

நாம் ஆதரிக்க வேண்டும். பல தசாப்தங்களாக இந்த பிராந்தியத்தின் சுறுசுறுப்பான வளர்ச்சி மற்றும் வளர்ந்து வரும் செழிப்புக்கு உறுதுணையாக இருக்கும் பகிரப்பட்ட விழுமியங்களும் கொள்கைகளும் இவை தான்.

இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு இலக்கொன்று உள்ளது. இறையாண்மையுள்ள மற்றும் சுயாதீனமான நாடுகளும் மாறுபட்ட கலாசாரங்களும் அருகருகே வளம் பெறக்கூடிய சுதந்திரமான மற்றும் திறந்த பரப்பொன்றை ஆதரிப்பதே அதுவாகும். முக்கியமாக, இந்த நோக்கத்தையும் இந்த இலக்கையும் அடைவதற்கு இந்த நாடுகள் அமைதியாக ஒன்றுபட்டு இருக்க முடியும்.

இராஜாங்க செயலாளர் பொம்பேயோ இலங்கைக்கான அவரது அண்மைய விஜயத்தின் போது குறிப்பிட்டதைப் போன்று, இந்த நோக்கமானது இலங்கை மீதோ அல்லது இந்த பிராந்தியத்திலுள்ள வேறு ஏதேனுமொரு பங்காளர் மீதோ அமெரிக்காவின் விருப்பத்தை திணிப்பது பற்றியது கிடையாது. உண்மையில், அது முற்றிலும் மாறுபட்டது. ஒரு நண்பன் மற்றும் பங்காளர் என்ற வகையில், தேசிய இறையாண்மை, சுதந்திரம், மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றுக்கான அனைத்தையும் உள்வாங்கிய அணுகுமுறையொன்றை ஊக்குவிப்பதற்கு அமெரிக்க முயற்சிக்கிறது. இது கூட்டணியொன்றை ஏற்படுத்துவதற்கான கோரிக்கை என்பதை விட கொள்கைகளை சுற்றி அணிதிரளுமாறு விடுக்கப்படும் அழைப்பொன்றேயாகும். ஆயினும்கூட, பங்காளர்கள் மற்றும் பிராந்திய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பானது இந்த அணுகுமுறையின் மையத்தில் இருக்கிறது. எந்தவொரு நாடும் தனிமைப்பட்டிருந்து இந்த பிராந்தியத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க முடியாது என்பதுடன், தமது கூட்டு நலன்களை பாதுகாக்க ஒத்துழைக்கும் இறையாண்மையுள்ள நாடுகளின் வலுவான வலையமைப்பொன்றில்லாமல் இந்த பிராந்தியத்துக்கான எந்த நோக்கமும் முழுமையடையாது.

ஆகவே, இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலான எமது அனைத்து முன்னெடுப்புகளும் புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட கூட்டாண்மைக்கான திறந்த தளங்களாகும்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வை பலப்படுத்தவும் மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த நிவாரணங்களுக்கு உதவவும் அமைதிகாத்தலுக்கு நிதியளிப்பதற்கும் மற்றும் நாடுகடந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும் 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பாதுகாப்பு உதவிகளை அமெரிக்கா இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு வழங்குகிறது. இந்த பிராந்தியத்தினால் ஏற்படும் சவால்களுக்கு நாம் அனைவரும் சிறப்பாக பதிலளிக்கக்கூடிய வகையில், நம்பகமான உறவுகளை கட்டியெழுப்புவதற்கும், இயங்குதன்மையை அதிகரிக்கவும் மற்றும் பங்காளரின் திறன் மற்றும் ஆற்றலை விஸ்திரிக்கவும் நட்பு நாடுகள், நண்பர்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலான இராணுவ பயிற்சிகளையும் நாம் நடத்துகிறோம். உதாரணமாக, எமது வங்காள விரிகுடா முன்னெடுப்பானது, இந்த பாதுகாப்பு சவால்கள் மற்றும் தேசிய அனர்த்தங்களில் சிலவற்றை ஆக்கப்பூர்வமான வகையில் கையாள்வதற்கு தேவையான திறன்கள் மற்றும் தகவல் பகிர்வு வலையமைப்புகளை நாடுகள் கட்டியெழுப்புவதற்கு உதவுகிறது.

கடல் சட்ட சாசனத்துக்கு அமைவாக சர்வதேச கடற்பரப்பை அனைத்து நாடுகளும் அணுகவும் அதிலிருந்து பயன்பெறவும் கூடிய வகையில் கடல்சார் களத்தை பாதுகாப்பதும் கடற்பிரயாணத்தின் சுதந்திரம் மற்றும் ஏனைய சட்டபூர்வமான கடல் பயன்பாடுகளை பேணிப் பாதுகாப்பதுமே எமது நோக்கமாகும்.

சர்வதேச சிவில் விமான சேவைகள் பற்றிய சாசனத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஆகாய மார்க்க சுதந்திரங்கள் மதிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பிலுள்ள எமது பங்காளர்களுடனும் நாம் பணியாற்றுகிறோம்.

அத்துடன், கடல்சார் பாதுகாப்பானது பொருளாதார பாதுகாப்புடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதால் எமது நோக்கத்தின் பொருளாதார அங்கங்கள் பற்றியும் சில வார்த்தைகள் பேசுவதற்கு நான் விரும்புகிறேன்.

தனிநபர் உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் மக்களை வலுவூட்டும் அதேநேரம், சுதந்திரமான தொழில்முயற்சிகளுக்கு உதவுவதே அரசாங்கத்தின் வகிபாகமாக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா நம்புகிறது. சந்தை அணுகல் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும், வர்த்தகங்களுக்கு இடையிலான உறவுகளை எளிதாக்குவதன் மூலமும், மற்றும் சுதந்திர, நியாயமான மற்றும் பரஸ்பர வர்த்தகங்களை ஊக்குவித்தும் நாம் இதை செய்கிறோம்.

வெளிவிவகார செயலாளர் கொலம்பகே கூறிய விடயங்களை நானும் குறிப்பிட விரும்புவதுடன், இந்த பிராந்தியம் பற்றி அதே அவதானிப்பை நானும் மேற்கொள்கிறேன். இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உட்கட்டமைப்பு முதலீடாக குறைந்தபட்சம் 1.7 ட்ரில்லியன் அப்படியில்லாவிட்டால் மேலும் ட்ரில்லியன் கணக்கான டொலர்கள் வருடாந்தம் தேவைப்படுகிறது. இது தொடர்பில் நான் கூறப்போகும் இரண்டாவது விடயம் என்னவெனில், இந்தளவு பணம் எந்த அரசாங்கத்திடமும் கிடையாது. மூன்றாவதாக, உலகின் நிதி மையங்களில் 70 மில்லியன் இருப்பு காணப்படுகிறது. இந்த மூலதனத்தின் அதிகமானவற்றை இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு கொண்டு செல்ல உதவுவதற்கும் முதலீட்டில் உண்மையான வருவாயொன்றை கொண்டுவரும் நிலையான திட்டங்களுக்கு இந்த நிதிகள் செல்வதை உறுதிப்படுத்துவதற்குமான இலக்கொன்றை அமெரிக்கா கொண்டுள்ளது.

இந்த தொற்றுப்பரவலின் பின்னர் தமது பொருளாதார நிலையை மீட்டெடுப்பதற்கு தனியார் தொழிற்துறையின் சக்தி ஒவ்வொரு நாட்டிற்கும் அவசியமாக இருக்கும் என்று இராஜாங்க செயலாளர் பொம்பேயோ கொழும்புக்கான அவரது விஜயத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தார். தொற்றுப்பரவலின் பின்னரான மீட்சியொன்றை அடைவதற்கு எமது பங்காளர்களுடன் பணியாற்றுவதற்கு அமெரிக்கா எதிர்பார்க்கிறது. அமெரிக்கா ஏற்கனவே இந்த பிராந்தியத்தில் கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. ஒரு ட்ரில்லியன் டொலர்களை நெருங்கி கடந்த தசாப்தத்தில் அது இரு மடங்கிலும் அதிகரித்துள்ளது. அமெரிக்க முதலீடுகளானது தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்றனவே தவிர கடன்களை அல்ல. அத்துடன், இந்த பிராந்தியத்தில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான தொழில்களுக்கு அமெரிக்க முதலீடுகள் உதவுகின்றன.

அமெரிக்க வெளிநாட்டு உதவிகளும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமெரிக்க ஆதரவு நிறுவனங்களும் இந்த பிராந்தியத்தின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு பல தசாப்தங்களாக அடிப்படையான பங்களிப்புகளை செய்துள்ளன. அண்மைய வருடங்களில் இந்தோ-பசுபிக் பிராந்தியம் குறித்த எமது நோக்கங்களுக்கு ஏற்ப அமெரிக்க அரசாங்கம் வருடாந்தம் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்கியுள்ளது. உட்கட்டமைப்பு, எரிசக்தி, மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத் துறைகளில் தனியார் முதலீடுகளைத் தூண்டும் புதிய முன்முயற்சிகள் இதில் அடங்கும்.

தேசிய இறையாண்மை மற்றும் உள்நாட்டு சுயாட்சிக்கு இடையூறு விளைவிக்கும் மற்றும் பலவீனப்படுத்தும் கடனுடன் பொருளாதாரங்களை சேதப்படுத்தும் மற்றும் ஊழல் நடைமுறைகளை ஊக்குவிக்கும் அரச ஆதிக்கம் கொண்ட நிதியளித்தலுக்கு மாற்றாக தனியார்துறை பங்களிப்புகளை விரிவுபடுத்துவதற்கும் நாம் உறுதிப்பூண்டுள்ளோம். அமெரிக்க நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மை கொண்டவையாகவும் நம்பகரமானவையாகவும் காணப்படுவதுடன், அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம் உள்ளிட்ட சட்டங்களுக்கு பொறுப்புக்கூறுபையாகவும் இருக்கின்றன.

நிலையான பொருளாதார அபிவிருத்தியானது இறுதியில் நல்லாட்சியில் வலுவாக வேரூன்றியுள்ளதுடன், குடிமக்கள் பதிலளிக்கும் ஆட்சிமுறையையும் தொழில்முனைவு மற்றும் திறன்மிக்க மூலதன ஒதுக்கீடு ஆகியவற்றை பேணும் சற்று கடுமையான ஒழுங்கு

விதிகளையும் அமெரிக்கா ஆதரிக்கிறது. அத்துடன், வெளிப்படைத்தன்மை, நேர்மை, மற்றும் ஒப்பந்தங்களின் புனிதத்தன்மையை ஊக்குவிக்கும் நிறுவனங்களை நாம் ஆதரிக்கிறோம்.

மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை போன்ற சர்வதேச முறையாவணங்களில் பொதிந்துள்ள மனித உரிமைகள், மத சுதந்திரம், மற்றும் ஜனநாயக குறிக்கோள்களை வென்றெடுப்பதற்கான எமது முயற்சிகளிலும் நாம் உறுதியாக இருக்கிறோம். இந்த உறுதிப்பாடுகளை நிலைநிறுத்துவதில் எம்முடன் இணையுமாறு நாம் அனைத்து நாடுகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

நிலையானதாக இருப்பதற்கு, பொருளாதாரங்களானது திறந்ததாகவும் வெளிப்படையானவையாகவும் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். உட்கட்டமைப்புகளானது நிர்மாணிக்கப்படுவதாக மட்டுமல்லாது பேணிப் பாதுகாக்கப்படவும் வேண்டும். பொது ஒப்பந்தங்களானது உயர் தரங்கள் தொடர்பில் வெளிப்படையானதாகவும் நீடித்து நிலைக்கும் உயர் தரமிக்க திட்டங்களை உறுதிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். இது G20 இனால் ஸ்தாபிக்கப்பட்ட இலக்கொன்றாகும். எளிதான, மலிவான அல்லது வேகமான வழியில் செய்ய வழியேற்படுத்தப் படுகின்றன என்ற வகையில், குறைவான எதுவும் ஊழல் மற்றும் மோசமான கட்டுமான தொடர்பான ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

இராஜாங்க செயலாளர் பொம்பேயோவும் குறிப்பிட்டதைப் போன்று, தனியார் முதலீடுகளை வரவேற்கும் வகையில் நாடுகள் தம்மை மாற்றிக் கொண்டால் மட்டுமே அந்த ட்ரில்லியன் கணக்கான டொலர்கள் அவற்றின் பொருளாதாரங்களுக்குள்ளும் அவற்றின் மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் மற்றும் சுபீட்சத்தை கொண்டுவரும் ஆக்கப்பூர்வமான தொழில்முயற்சிகளுக்குள்ளும் ஒதுங்கும். அது நடந்தேறுவதற்கு இந்தோ-பசுபிக் பிராந்திய தலைவர்கள் வெளிப்படைத்தன்மை, ஊழல் எதிர்ப்பு, மற்றும் பொறுப்பான நிதியளிப்பிற்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

நிறைவாக, அனைத்து நாடுகளும் அவற்றின் மக்களும் வளம் பெறக்கூடிய சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்றுக்கான நோக்கமொன்றை உருவாக்குவதற்கான இந்த விதிமுறைகள் மற்றும் பகிரப்பட்ட கொள்கைகள் தொடர்பில் இன்றைய மாநாடு ஆராய்ந்து விரிவாக்கும் என்று நான் நம்புகிறேன். இறையாண்மை மற்றும் தேசிய சுயாதீனத்துக்கான மதிப்பு, திறந்த முதலீடு மற்றும் வெளிப்படையான உடன்படிக்கைகள் மற்றும் இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையினலான சுதந்திர, நியாயமான, மற்றும் பரஸ்பர வர்த்தகம், மற்றும் கடற்பிரயாண மற்றும் குறிப்பிட்டதொரு ஆகாயப் பரப்பிலான விமானப் பயண சுதந்திரம் உட்பட சர்வதேச சட்டத்தை பின்பற்றுதல் உட்பட இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு சிறந்த முறையில் சேவைபுரிந்த விழுமியங்களை நாம் வெற்றிக்கொள்ள வேண்டும். இவை நாம் பொதுவாக கொண்டுள்ள விழுமியங்களாகும். நாம் பகிரப்பட்ட உறுதிப்பாடுகளைக் கொண்டுள்ள சர்வதேச கூட்டு உடன்படிக்கைகளில் விழுமியங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன், எமது நாடுகளுக்கு இடையிலும் மத்தியிலும் நாம் நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூடிய இந்த விதிமுறைகள் மற்றும் கொள்கைகளை சுற்றியே அது காணப்படுகிறது.

இன்றைய காலைப்பொழுதில் கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்கு மிக்க நன்றி. இந்த நிகழ்வு முழுவதுமான குழு கலந்துரையாடல்களில் இருந்து மேலும் பல விடயங்களை அறிந்து கொள்ள நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

நன்றி.

# # # #